Printing

12/8/93

சைவம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௨] 1919ஆ பிப்ரவரி [பகுதி ௨.

தசபுராணம்.

"பருவரை [illegible] [illegible] [illegible]
[illegible]
திருநெறியொடு [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]
பெருந்துறை [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]
அருள் [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]."

இத்திருப்பாசுரத்தின் பொருள் [illegible] [illegible] [illegible] குறிப்பிடுகிறது. இனி இதன் பொருளை [illegible] [illegible] அறைதல் [illegible].

[illegible] [illegible] [illegible]
[illegible] ([illegible])

விசும்பு சுடுவான் = ஆகாயவரையிற் சுடும்படியும்,
நெடுமால் நிறத்தை கடிவான் = விஷ்ணுமூர்த்தியினது திருமேனியை யெரிக்கும்படியும்,
எழுந்திசைபோம் பெருவிடம் = தோன்றிய விடத்தின் வேகமானது சென்று அதிகரித்தலும்
கைவிட்ட இமையோர் = தாம்பற்றியிருந்த வாசுகியைக் கைவிட்டதேவர்கள்.
பயகாட = பயந்து இரந்து = யாசித்து
பிரானே = பெருமானே, இதற்குமற்று ஓர்பிரதிகாரம் = இவ்விடந் தீர்வதற்கு வேறோர் தீர்வினை,
அருளாய் எனலும் = திருவருள் செய்வாய் என வேண்டுதலும்,
அருள் கொடு = திருவருள் கொண்டு, மாவிடத்தை = அவ்வரியகோர விடத்தினை, எரியாமல் = தேவர் முதலியோரை யெரித்துவிடாமல்
உண்ட = திருவமுது செய்த, அவன் = அவ்வெல்லாம் வல்ல சிவபெருமான்
அண்டர் அண்டர் = தேவர் தேவராகிய பிரமவிஷ்ணுக்களுக்கும்
அரசே = தலைவன் ஆவன்.
மற்றுயிரிதென்னும் பொருளது. ஏ = அசை.

முன்னர்க் கூறியவண்ணம் இனி விஷபானம் செய்த சரிதத்தைக் காஞ்சிப்புராணம் மணிகண்டேச்சரப் படலத்தால் அறிவிப்பாம். பூர்வத்தில் தேவரும் அசுரரும் இறப்பினுக்கு அஞ்சி இறவாதிருக்கும் மருந்தினை விரும்பி அதனைப் பெறும்படி பிரமனை அணுகி அவனைப் பணிந்து 'ஓ பிரமனே' நாங்கள் இறவாதிருந்து யுத்தத்தைச் செய்ய எங்கட்கோர் உபாயத்தினை அருள் செய்தல் வேண்டும்' என்னலும் அதைக்கேட்ட பிரமன் அத்தேவாசுரருடன் வைகுண்டத்தை அணுகி அத்திருமாலைப் புகழ்வாறுதுதித்தலும் அதனாற் கண்விழித்த திருமால், 'நீங்கள் எற்றுக்கு இங்கு வந்தீர்கள்' என்று வினவுதலும் ஒபசியதுழாய் மாலையணிந்த மாதவனே! நாங்கள் இறவாதிருக்க ஒருபாயத்தினைத் தேவரீரிடத்து அறிந்து கொள்ளவே இங்கு வந்தனம் என்றனர். திருமால் சிறிதுபொழுது எண்ணினவராய்ப் பிறகு ஓர்வகை துணிந்து ஓ! தேவாசுரர்களே! நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. நாம் பாற்கடல் கடைந்து அதனிடத்தே தோன்றும் அமிழ்தத்தை இறவாதிருக்க உண்பிப்போம் என்னலும், தேவாசுரர்கள் 'பாற்கடல் கடைவது எவ்விதம்' மென்று வினவினர். அப்போது இந்திரன் நாம் மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகியைக் கயிறாகப் பூட்டிப் பாற்கடல்

கடைந்து அமிழ்தங் கொள்ளலாமென்றனர். தேவரும் மிகுதியும் சம்மதித்தவராயினர். பிறகு இன்னார் யாவரும் பாற்கடலடைந்து, மந்தரமலையினை மத்தாக நிறுத்தி வெளிறும் உடலினையுடைய வாசுகியைத் தாம்பாகச் சுற்றி மலைபோன்ற இரண்டு தோள்களையுடைய அசுரரும் சுரரும் கடைந்த காலத்து விஷ்ணுமூர்த்தி அவ்விருவரும் பின்னரையும் பார்த்து ஓ தேவாசுரர்களே உங்களில் யாவர் வலிமைகொண்டு இப்பாற்கடல் கடைந்து அமிழ்தங் காண்கின்றீர்களோ அவர்தமே அமிழ்தங் கொள்ளத்தக்கவராவீர் என்றனர். அதனைக்கேட்ட அசுரர் மிகுதியும் மகிழ்ந்தவராய் வாசுகியை இரண்டுபாரிசத்தும் பற்றி வலிமைகொண்டிழுத்தலும் மந்தரமலையானது "அசலம்" என்னும் தன்பெயர் சாட்சியாம்போல் அசையாமலிருந்தது. அதனைக்கண்ட தேவர், அசுரரை நீக்கித் தாம் வலிக்க எண்ணி முயற்சித்தும், மந்தரம் அசையாமலிருந்தது. தேவரும் இளைப்புற்றவராயினர். அக்காலத்து இந்திரகுமாரனாகிய வாலி தானுமுடன் சென்று பூசை செய்யும் நியமங்கொண்டு பாற்கடலிடம் வந்தான். அவனைக்கண்ட யாவரும் நல்வரவு கூறுதலும், அவனும், பிரமவிஷ்ணுக்களை வணங்கி, மற்றைத்தேவர்களை ஆசிர்வதித்து அவர்களை நோக்கி நீவிர் என்செய்வது என வினவினன். பிரமன் வாலியை நோக்கி கடைந்த யாவற்றையும் கூறி ஆதி கூடித் தெய்வமே உன்னை இக்கருமம்பற்றிச் செய்ததாதலால் நீ இத்தருணத்து உதவிபுரிதல் வேண்டும் என்றனன். வாலியும் புன்னகை கொண்டவனாய் மிகப்பலம் கொண்ட தேவ, அசுரர்களாகிய உங்களால் ஆகாததொன்றினை யானொருவனே செய்யவல்லனோ, ஆயினும் நாம் யாவரும் ஒன்று சேர்ந்து இழுப்போம் என்று தேவரும் அசுரரும் வாசுகியை பக்கங்களிற் பற்றித்திரித்தனர். இவ்விதம் இழுத்தும் தேவர் அசுரர் வலியுடைத்தவராய் நிற்றலைக்கண்டு வாலியானவன் விலக்கித் தானொருவனே இருபக்கமும்பற்றி வலிப்பானாயினன். அக்காலத்து மந்தரமலை கடலுள் ஆழ்தலும் விஷ்ணுமூர்த்தி கச்சப (ஆமை) வடிவங்கொண்டு தாங்கினார். வாலி இடைவிடாமல் மலையைத் திரித்து கடைந்தபோழுது வாசுகியானது வலிபொறாது வாயில் நுரைதள்ளக்கக்கினதாம் காளகூடமாகிய ஆலம் என்னும் விடந்தோன்றியது. பாற்கடல் [illegible] கொத்தும்படியும், அண்டகோளமுற்றும் அழலப்படியும் [illegible] வெதுப்பவும் [illegible] எழுந்தீயானது உடன் [illegible] தாக்கப்படுமோ [illegible] வாலியும் வாசுகியை விட்டு ஓடலுற்றனன்.

அத்தீவிடத்தால் வீட்டத்தால் மாயவனும் தன் வெண்மைநிறமேனி நீங்கிக் கருநிறங்கொண்டு கண்ணுதல் கயிலையையடைந்தனன். அவனும் அரிய பொன்னி

கம் சேனிட் புகையுருவடைந்தான். மற்றைய திசைத்தலைவரும், தேவரும் தம்முருநீங்கி வேற்றுருவடைந்தனர். பிறகு செய்வது இதுவென அறியாராய், அடைந்தார்க்கு இன்பமும் ஒன்றே பயக்கும் வெள்ளியங்கிரியை யடைந்து வெயிலில் வெந்த உயிர்கள் நிழலிற் சேர்ந்தனபோல் நின்றனர்.

பிறகு திருமால், பிரமன், முதலாம் யாவரும் ஒருங்கு சேர்ந்து மும்மலமுடைய பரசிவப்பிரபு எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் கடைத்தலையில் வந்து சேர்ந்தனர். அங்கு உள்ள பூதகணம் முதலியோர் தடையின் தடையுண்டு நிற்கும் எண்டிசைத்தலைவர், தாமொரு தடையிலாது அனைத்துமெய்க்க தனித்தடையாக நிற்கும் நந்திபெம்பெருமானிடத்து உத்தரவுகொண்டு உள் செல்லுதலும் உருத்திரகணிகையர் முதலியோர் ஆடலும் பாடலும் நீங்காத மிகச் செல்வம் பொருந்திய பெரியதோர் சபையின் நடுவண் எழுந்தருளியிருக்கும் ஆதி அந்தமிலாத அரும் பெருஞ்சோதியின் அரிய பொலிவினைத் தரிசித்தவராயினர். பிறகு நந்திபெம்பெருமான் விஷ்ணு முதலியோரைத் தூரத்தே நிறுத்திச் சிவபெருமானிடத்துச்சென்று தேவர்களது வரவை விண்ணப்பித்தலும் பெருமானும் திருவுளமிசைந்து அவரை கண்டுக்கொண்டு வருக என்றனர். நந்திபெம்பெருமானும் தமது திருப்பிரம்பை அசைத்து அழைத்தருளுதலும் விஷ்ணுமூர்த்தியும் பிரமனும் அஞ்சலிசெய்தவராய் வந்து மருங்கில் அணுகி நிற்றலும் உற்றநோக்கா அருட்சத்தியொடு கூடியுள்ள அருட்பெருந்தகையும் விஷ்ணுவை நோக்கி மாயனே நீ இருக்கை யுருவாயினை ஓ பிரமனே நீ புகை யுருவாயினை என்று அருள்செய்தலும் பக்கத்தில் உள்ள தேவர்களும் அரகர என்னும் முழக்கொலியைச்செய்ய, பிரமன் ஓ பெருந்தகையே தேவரீருடைய திருவடியைத் தொழும்படி" தாரகாசுரன் மற்றவர்கள் பூதகணங்களால் தடுக்கப்பட்டுப் புறம்பே நிற்கின்றனர்.

அவர்கள் கண்டுவரும்படி, கட்டளையிட்டருளல் வேண்டும் என்று இரத்தலும், அவ்விதமே நந்திபெம்பெருமானை யாவரையும் உள் விடுத்தனர். பிறகு பிரமன் ஐயனே யாங்கள் அறியாமையால் தேவரீரது திருவருளைப்பெறாது எனையுடைய அமிழ்தம் பெறும்பொருட்டுப் பாற்கடல் கடைந்தோம் அதில் அமிழ்தம் தோன்றுதல் விடம் தோன்றியது அதனால் சராசரங்களெல்லாம் எரிந்து போகும் தருதியில் உள்ளது. தேவரீரது திருவருளைப் பெறாது செய்யும் காரியங்களெல்லாம் துன்பமற்றென்றுமென்று சொல்லும் வாசகம் மெய்யாயிற்று. ஆதலின்

வர்போக நின்றவர் இங்குவந்தோம் தேவரீர் அருளாலன்றி உலகம் வாழ்வ
டும். அதனுல் தேவரீர் சிறிதும் தாமதமாது திருவருள் செய்தல் வேண்டு
மென்றனும், பெருமானும் அஞ்சலீர் என்று அருள் செய்து இருந்த இட
த்தினின்றே தம் திருக்கரத்தை நீட்டுதலும் தாமரையின்மீது வண்டொ
ன்று தங்கியதுபோல் அவரது திருப்பார்வையால் சிற்றுருவாகி அடங்கி
நின்றது.

அவ்விதம் தமது திருக்கரத்தடைந்த விடத்தினை எறிதல் வேண்டு
மோ அல்லது உண்டல் வேண்டுமோ என்று தேவர்களை வினவுதலும் தேவ
ர்கள் ஊமையர்போல இருந்தனர். பிறகு தம் ஒருபுடை எழுந்தருளியிரு
க்கின்ற அம்பிகையின் திருமுகத்தை நோக்கி அரிவையே இந்தக்கொடிய
விடமானது உலகமெலாம் எரித்தது. ஆயினும் உனது பார்வையால்
இனிய அமிழ்தமாகும். ஆதலால் நான் இதனை உண்கின்றேன் என்று அகி
லம் முழுவதும் உய்யப்பருகினன். அவ்விடமானது திருமிடற்றினிடத்தே
சிவந்த ஆகாயத்தில் கரிய மேகமானது அழகு செய்வதுபோல் நின்றது.
பிரம விஷ்ணுக்களும் மற்றையதேவர்களும் அரகரா என்னும் ஒலிகளைச்
செய்தனர். அவன் புகழ்பாவும் எடுத்துத்துற்றினர். பிறகு கருணையங்
கடலாகிய நெற்றிக்கண்ணன் அவரையெலாம் மறுபடியும் கடல்கடைந்து
அமிழ்தம் உண்ணும்படி ஏவினன் என்பது சரிதமாகும்.

மேற்கூறிய தேவாரத்தாலும் புராணத்தாலும் சிவபெருமான் ஒரு
வரே எல்லாம்வல்ல இறைவரென்பதும் மற்றைத்தேவர்கள் இறைவர் அல்
லர் என்பதும் வெளிப்படையாயிற்று. ஆதலால் நாம் செய்த புண்ணியத்
தின் பயனுகக்கொண்டுள்ள சைவசித்தாந்த மதத்தினைப் போற்றிப் புகழ்
ந்து பிறர்க்குக்கூறி அடையவேண்டிய பெரும்பயனுகிய முத்தியின்ப
த்தை அடைவோமாக.

பத்திராதிபர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இலங்கை.

இலங்கைக்கு ஸ்ரீமான் ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்களின் விஜயம்.

பின்னொருநாள், யாழ்ப்பாண கல்லூரியில், முதலியார் சபாரத்தினம் (டெப்டி பிஸ்கல்) அவர்கள் அக்கிராசனத்தின்கீழ், ஆங்கிலத்தில், 'சைவமதம்' என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு, மற்ற மதங்களினின்றும் சைவம் எந்த அம்சத்தில் சிறந்ததோ அந்த அம்சங்களை மட்டும் எடுத்துரைத்தனர். ஹானரபிள் ஏ. சபாபதி, பிரின்ஸ்பால் நெவின்ஸ் செல்லத்துரை, ஸ்ரீமான் இளையதம்பி அவர்கள், (அட்வொகேட்) முதலிய கனவான்களெல்லாம் வந்திருந்து மிகவும் களிப்படைந்தனர். அடுத்ததினம் பருத்தித்துறையில் (பாயிண்ட் பேட்ரோ) இரண்டு பிரசங்கம் காலையும் மாலையுமாக நடந்தேறியன. யாழ்ப்பாணத்திற்கு அடுத்த 'கொக்குவில்' என்ற இடத்தில் 'கடவுள் சொரூபம்' என்ற விஷயத்தை உபந்நியசித்தனர். 'உடுப்பிட்டி' என்ற இடத்திற்கும் போய் சம்ஸ்கிருத கல்வி விஷயமாய் சில சங்கதிகளை எடுத்துரைத்தனர். இப்பல உபந்நியாசங்களுக்கு ஏற்பாடு செய்தவர்கள், ஹிந்து வாலிப சங்கத்தின் பிரதம காரியதரிசியாகிய பிராக்டர் ஸ்ரீமான் அம்பலவாணர் அவர்களும், உப-சபைக்காரியதரிசி பிராக்டர் முத்துக்குமாரு, டெப்-கலெக்டர், எஸ். டி. சிற்றம்பலம், கொக்குவில் சபைத்தலைவர் முதலியார் சபாரத்தினம் அவர்கள் முதலிய கனவான்களே. அவர்களுக்கு பிள்ளையவர்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறார்கள், அங்கங்கிருந்து உபசரித்த மாதுசிரோமணிகளுடைய அன்பையும் மிகவும் மெச்சுகிறார்கள். இதுமட்டுமன்றி, அவர்கள் உபந்நியசித்த இடங்களிலெல்லாம் 'நன்றிமறப்பது நன்றன்று' என்னும் குறி, 50-வருஷங்களுக்கு முன்னர் நம் சமயம், பரசமயங்களால் இடைஞ்சல்பட்டகாலம்,

நம் சமயகுரவர்களைப் போலுமே உதித்து, தம்முடைய நூல்களாலும் பெருமொழிகளாலும் புறச்சமயிகள் அடங்கும்படிச் செய்து, நம் சைவர்கள் தங்கள் சமயத்தை நன்குணர சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அங்கும் இங்கும் ஸ்தாபித்து 'சைவப்பயிரை வளர்த்த திருவாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலவர்களே என்றும், அவர் காலந்தொட்டே நம் சமயக்கிளர்ச்சிகள் அதிகம் காணப்பட்டதென்றும், ஆகவே அவர் ஞாபகத்தை மிகவும் கொண்டாடி அவருக்கு நன்றி செலுத்துவதாகவும் அந்த நன்றியின் காரணமாகவே, சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 'அக்கிராசனம் வகிக்கும்படி இலங்கை கனவான்களான ஹானரபில் பொ. இராமநாதன் அவர்கள், ஹானரபில் ஏ. கனகசபை (இப்பொழுது சர் ஏ. கனகசபை) முதலியார் என் சபாரத்தினம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களென்றும், தம் நூல்களையும், பத்திரிகைகளையும் வாங்கிப்படித்து ஆதரித்து இலங்கையோர்களையும் மறவாது, நன்றியும் செலுத்தினார்கள். நாவலரவர்கள் காலத்தவராய ஸ்ரீலஸ்ரீ. இராமலிங்க சுவாமிகளும் கொஞ்சம் பின்னவராகிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களும் சைவ உலகிற்கு எவ்வித நன்மைகளைப் புரிந்திருக்கும் விஷயத்தையும் விளக்கினார்கள்.

யாழ்ப்பாணத்தை விட்டு ஜனவரி 1உ கொழும்பில் வந்திறங்கினார்கள். ஷாப்பு ஸ்ரீமான் சொக்கநாதர், முதலியார் வைத்தியநாதர், பாரிஸ்டர் சி. பெருமாள் பிள்ளை, சைவபரிபாலன சபையின் காரியதரிசி சி. தியாகராஜா, விவேகானந்த சபை காரியதரிசி இராமநாதன் முதலிய அநேக கன தனவான்களால் வரவேற்கப்பட்டு, சீப் முதலியார் வைத்தியநாதர் இல்லத்தில் அமர்த்தப்பட்டனர். அங்கு முதலியாரவர்களாலும், அவர்களுடைய உண்மைத் துணைவியாராலும், அவ்வம்மையாரின் பிரிய சகோதரியாலும் உபசரிக்கப்பட்டமை மிகவும் போற்றற்பாலது. அவ்வண்ணமே தேவர்கள் இல்லங்கட்குச் சென்ற பொழுதெல்லாம் அவர்கள் மனைவி மக்கள் அவர்களை உபசரிக்கப்பட்டமை மறக்கற்பாலதன்று.

பின்னையவர்கள் கொழும்பில் 1, 2, 4, 5 தேதியில் தங்கியிருந்தார்கள். இந்த நான்கு நாட் பிற்பகலிலும் நான்கு பிரசங்கங்கள் நடைபெற்றன. அவைகளில் இரண்டு பிரசங்கங்கள் இலங்கை சைவ பரிபாலன சபையாரின் ஆதரவின் பேரிலும், விவேகானந்த சபையின் ஆதரவில் இரண்டு பிரசங்கங்களும் நடந்தன. 'சைவ மதம்', 'அத்வைதம்' என்னும் பொருள்களைப்பற்றி ஆங்கிலத்திலும், 'கடவுள் சொரூபம்', 'பெரிய புராணம்' என்பவைகளைப் பற்றி தமிழிலும், யாவரும், வியக்கவும், மகிழ

கவும் பேசினர். ஞானாசாரியின் பாலசிங்கம் அவர்கள் (இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பதிப்பாசிரியரும் போகராதி ஆசிரியராகிய கதிரைவேற் பிள்ளை யவர்களின் குமாரர்) முதலிய கன தனவான்களும் வந்திருந்து அகமகிழ்ந் தனர். அக்கிராசன மலங்கரித்த கன தனவான்களெல்லாம் பிள்ளை யவர்களின் சைவ உலகிற்கு புரிந்திருக்கும் பல நன்மைகளைப் பற்றி பேசி வியந்தன ராதலும் ஸ்ரீமான் சி. பெருமாள் பிள்ளை யவர்கள், எவ்விதம் அந்தக்கால த்திற்குத் தக்கபடி அவதரித்து நன்மைபுரிந்த ஸ்ரீலஸ்ரீ நாவல ரவர்கள் முதலியவர்களுக்கு நன்றி செலுத்தினர்களோ இக்காலத்து தமிழ்ப்படிப் புக் குறைந்து ஆங்கிலம் பெருகி பற்பல மதங்களால் தாக்கப் பட்டுள்ள இக்காலத்து ஆங்கிலத்திலேயே நம் சமயிகளுக்கு நம் சமயத்தி னுண்மை யையும், புராதனத்தையும், சிறப்பையு மெடுத்துக் காட்டி, பிற மதங்க ளிற் புக வொட்டாமற் றடுத்து, இலங்கையிலும், தென் இந்தியாவிலும் சைவப்பயிரை வளர்த்த மகான் இவரே யென்றும் பேசினர். சப் முதலி யார் வைத்தியநாதர் பிள்ளையவர்களின் நூல்களைப் படித்திருந்தும் நேரில் கேட்காத குறைவால் நேர்ந்த அநேக சந்தேகங்கள் பிள்ளையவர்களின் பிர சங்கத்தால் அறவே யொழிந்ததென்றும் புகழ்ந்தனர். பிள்ளையவர்கள் ஜனவரி 3-ந் தேதி கண்டிக்குச்சென்று, அங்கு உள்ள பெருங்காட்சி களையும், எங்கும் அற்புதமாக காணப்பட்ட நிலவளம், நீர் வளங்களையெ ல்லாம் கண்ணுற்று மறுநாட் காலை திரும்பினர். அங்கு அவருக்கு உபச ரித்தவர்கள் புராக்டர் வி. சரவணமுத்து அவர்களும் அவர்களுடைய அன் புடை மனைவியாரும், இவர் தென்னிந்தியாவில் பாரஸ்டு இலாகா கன்சர்வே டராய் இருந்தவரும் பிள்ளையவர்களின பழைய சிநேகிதரான வீ. என். குரு நாதபிள்ளை யவர்களுடைய சகோதரராகத் தெரிந்து மிகவும் களிப்பாயினர். அவர்கிருகத்தில், பிள்ளையவர்களுடைய ஆப்தசிகாமணியாகிய திவான் பக தூர் காலிங்கராயர் கவுண்டர் அவர்கள் (ஊத்துக்குளி ஜமீன்தாரவர்கள்) உபசரிக்கப் பட்டிருக்கக்கண்டு மிகவும் அன்புடையராயினர்.

5-உ பிற்பகல் 3-மணிக்கு சைவபரிபாலன சபையில், தோத்திரம் சொல்லியபின், பெரியபுராணப் பிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டு, 5½-மணிக்கு நிறுத்தப்பட்டது. பிள்ளையவர்கள் தம் சாகைக்குத்திரும்பி, 7-மணிக்குமுன் ரெயிலடியில் வந்துசேர்ந்தார்கள். பிரசங்கம் நிறுத்தப்படவும் சபையார்கள் கலையாமல் 7½-மணிவரை பஜனை செய்துகொண்டிருந்து அங்கிருந்து ஒருங்கு திரண்டு ரெயிலுக்கு வந்து அளவளாவியிருந்து உபசாரமான சிலபேச்சுகள் நடந்தன.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டமயம்

சகலசாஸ்திர நிர்ணய சங்கிரகம்.

இந்தச் சாத்திரத்துக்குச் சகலசாஸ்திர நிர்ணய சங்கிரகம் என்றுபெயர். இது வஸ்துநிர்ணயம் பண்ணினது. இதுசோழதேசத்தில் கஞ்சனூரிற் அரதத்த சிவாசாரியர் செய்தநூல். யாதின் பொருட்டெனின் ஓதியுணராமற் பற்பல சமயங்களிலும் புகுதும் அறிவீனர்களுக்கு அறிவு பிரகாசிக்கும் படியாகவும், மலத்திரயம் நீங்கி மோக்ஷத்தையடையும் பொருட்டாகவும், இரக்கக் குறிப்பினாற் செய்த நூலென அறிந்து கொளற்பாற்று.

சகல சாஸ்திர நிர்ணய சங்கிரகம்,

சர்வதரிசிகளாயிருக்கிற கிருத கிருத்தியர்கள் சிதேந்தரியர்களாய்ச் சர்மசன்மியாயிருக்கிற பெரியவர்களுக் குவமையில்லாத வஸ்துவைத்தானே உபாசிக்கிறது சுபாவம். அவர்களைக்குறித்து இந்தநூலைப் பிரவர்த்திக்கவில்லை. பின்னையாரைக் குறித்தென்றால் சுருதி சித்தாந்த சாஸ்திர வஸ்துவைச் சாஸ்திரத்திட்டி விசாரம் பண்ணாதபடியினாலே வஸ்து நிரணயமாகாமல் சஞ்சல புத்தியாயிருக்கிற ஆன்மாக்களைக் குறித்துச் சர்வதரிசியாயிருந்த பெரியோர்கள் சுருதி சித்தாந்த வஸ்துவை இந்த நூலினாலே வெளியிட்ட பிரகாரம் ஈசுரசத்தத்துக்கும் பரப்பிரம சத்துக்கும்பொருளாரோ அவரே வஸ்துவென்று சகல சாஸ்திர நிர்ணயம். ஈசுரசத்தமும் பரப்பிரம சத்தமும் சாம்பசிவனுக்கே யுண்மை. இதற்குப் பிரமாணம் சகலபூதத்துக்கு ஈசுரன் சகலவித்தைக்கும் ஈசுரன் சகல செகத்துக்கும் ஈசுரன் சாம்பசிவனென்று இரண்டாம் வேதம் சொல்லுகிறபடியினாலும், அமரநிகண்டில் சம்புவாதி நாமத்துடனே ஈசுர நாமமுமெடுத்து இருக்கிறபடியாலும் பாரதம் அநுசாசனீக பர்வத்தில் கிருட்டிணதேவர் தருமபுத்திரருக்குச் சிவநாம நிர்வசனமநுக்கிரமம் பண்ணுகையில் மகாதேவராதி நாமத்துடனே ஈசுரநாமத்துக்கு நிர்வசனம் பண்ணுகையாலும், போதாயனர் நவக்கிரகங்களுக்கு அதிதேவதை சொல்லுமிடத்தில் ஈசுரம்

யாஸ்காரமவீத்திய வென்றபடியினாலும், கூர்ம புராண முதலிய புராணங்களிலும் ஈசுரசத்தம் சாம்பசிவனுக்கே சொன்னபடியாலும், பூலோகத்திலே ஈசுராலயமென்றால் பண்டித பாமரர் முதலாய்ச் சிவாலயத்தையே நிச்சயித்தபடியினாலும், ஈசுரசத்தப்பொருள் சாம்பசிவனே. இந்தப்படி காளிதாசனும் குமாரசம்பவத்தில் ஈசுரசத்தம் அர்த்தசந்திரனைத் தரித்திருக்கிற சிவனுக்கேயென இந்த ஈசுரசத்தத்துடனே மகாசத்தமும் கூடி மகேஸ்வரனென்ற சுருதிகளும் உக்கிரட்டசத்தங்கூடிப் பரமேசுரனென்று கைவல்லிய உபநிடதமும் சொல்லிற்று.

பரப்பிரம சத்தம், அஞ்சுவாக்கியத்துக்குப் பொருளாரோ அவனே பரப்பிரமம். அஞ்சுவாக்கியமாவது தகரவித்தை, பஞ்சகோச விலக்ஷணம், எவனவனென்கிற வாக்கியம், மகாவாக்கியம், சித்தாந்தம் ஆக அஞ்சுவாக்கியத்தில் தகரவித்தை மூன்றும். வேதத்தில் பிரமபுரத்தில் புண்டரீக புரத்திலிருக்கிற சிதாகாசத்தை அறியவேண்டுமென்று சொல்லி இரண்டாம் வேதத்தில் இதய புண்டரீகபுரத்தில் பிரகிருதிக்குமேலாக இருக்கிற பரமேசுரனென்றும், கைவல்லிய உபநிடதத்தில் விராட் புருடனிதய புண்டரீகத்தின் மூன்று கண் நீலகண்டம் உமையுடன் கூடியிருக்கிற பரமேசுரனையறிந்தவர்களே பத்தரென்றும் அதர்வணசிகா உபநிடதத்தில் சகல ஐஸ்வரியமுடைய சம்பு சிதாகாசமத்தியிலிருப்பானென்றும் இன்னும் பலவிடத்திலும் தொகுத்துச் சொன்னபடியினாலும் சகல புராணங்களினும் தகரவித்தைப்பொருளே சிதம்பரமென்றெடுத்த படியினாலும் தகரவித்தைப்பொருள் சாம்பசிவனென்றே நிர்ணயம்.

பஞ்சகோசவி லக்ஷணம்: இரண்டாம் வேதத்தில் பஞ்சகோசக்குகைக்குள் எல்லாவற்றிற்கு மேலாயிருக்கிற பிரமத்தை யறியவேண்டுமென்று சொல்லி அந்த வேதத்தில் குகைக்குள்ளிருக்கிறவர் ஈசுரனென்றும் கைவல்லிய உபநிடதத்தில் எல்லாவற்றிற்கும் விலக்ஷணம் எல்லாவற்றிற்கும்சாக்ஷி ஞானமயம் சதாசிவமென்று சோகம் பாவனை சொன்னபடியினாலும் இன்னும் பலபிரமாணங்களினாலும் பஞ்சகோச விலக்ஷணம் சாம்பசிவனென்றே நிர்ணயம்.

எவனவனென்கிறவாக்கியம் இரண்டாம் வேதத்தில் சிஞ்சுமார உபநிடதம் சிஞ்சுமாரத்துக்குப் பிரமா விட்டுணுவாதி தேவதைகளை அங்கமாகச் சொல்லி எவன் சிரசோ அவனுக்குவந்தனமென்று சொல்லி முடிக்கையினாலும், அங்கத்திற் சொல்லாத தேவதை சாம்பசிவன் மாத்திரமாகையா

னும், வந்தன முத்திரை தேவதாந்தரங்களுக்கு வேதஞ் சொல்லாதபடியி னும், கர்பத்திர நியாசத்திற் சிரசுத்தானம் உருத்திரருக்கே சொன்ன படியினாலும, எவனவனென்கிற வாக்கியப்பொருள் சாம்பசிவனென்றே நிர்ணயம்.

மகாவாக்கியம் சாமவேதத்தில் மற்ற மூன்று வேதமகாவாக்கியமும் இதிலடங்கும். மகாவாக்கியமாவது மூன்றுபதம். அதில் சீவபதமும் ஐக்கியபதமும் தள்ளியது என்கிறபதத்துக்குப் பொருள் சாம்பசிவனே. அதுவென்பது சிவனுடைய பொதுவைக் குறித்து அந்தப்புருடனென்கிற நாமதேயம் பஞ்சப்பிரம மந்திரத்திலிருக்கையாலும், மந்திர புட்பத்தில் வேதாந்தத்திலிருக்கிற மகாவாக்கியப்பொருளென்று உருத்திரனைச் சொன் னபடியினாலும் அதுவென்கிற வாக்கியப் பொருள் சாம்பசிவனென்றே நிர்ணயம்.

சித்தாந்தம் மூன்றும் வேதத்தில் ஒன்றே இது இரண்டில்லை பிரம மென்று சொல்லி இரண்டாம் வேதத்தில் உருத்திரனொருவனேவஸ்து. இரண்டாம் வஸ்து இல்லையென்று சொல்லி அநேகமிடத்திலே முறையிட் டபடியினாலும் அதர்வணசிகா உபநிடதம் முமுட்சுகள் சகலத்தையும்விட்டு தியானிக்கவேண்டியவஸ்து சிவமொன்றே யென்று முடித்தபடியினாலும் சித்தாந்தப்பொருள் அச்சிவனென்றே நிர்ணயம்.

ஆக அஞ்சுவாக்கியத்துக்குப் பொருள் சாம்பசிவனாகையால் அவரே பரப்பிரமமாகையால் ஈசுரசத்தமும் பரப்பிரம சத்தமுமுள்ளவனே வஸ் துவென்று சகலசாஸ்திர நிர்ணயம். அரிப்பிரமாதிதேவர்களையும் சுருதி பிரமமாகச் சொல்லுகின்றதே யென்னில் பிரமம் ஒன்றல்லாமல் இரண்டி ல்லை ஆகையால் அவர்களைப் பிரமமாகச் சொன்ன சுருதிகளெல்லாம் பூர்வ பக்ஷம் அது எப்படி யென்னிற் பஞ்சகோசத்தையும் பிரமமென்ற சுரு தியைப் பஞ்சகோசவிலக்ஷணம் பரப்பிரமசத்தம் பூர்வபக்ஷம் பண்ணி அது போல் அரிபிரமாதி தேவதைகளைப் பிரமமாகச்சொன்ன சுருதியைப் பூர்வ பக்ஷம் பண்ணினது. அந்தச்சுருதி வசனத்திற் சிலசொல்லுகிறோம். இரண் டாம் வேதத்திலும் உருத்திரனொருவனே இரண்டாம்வஸ்து இல்லையென்று அநேகவிடத்தில் முறையிடுகிற சுருதியும் மந்திரபுஷ்பத்தில் உருத்திர னு க்குமேல் பரமில்லை யென்கிற சுருதியும் உக்கிரட்டத்திற்கும் உக்கிரட்ட தாம் பிரமதேவர் அவருக்குப் பரம் விட்டுணு அவருக்குப்பரம ஈசன் அவ ருக்குச் சரியுமில்லை அதிகருமில்லை யென்கிற சுருதியும் அன்னம் பிரம தே

வராசாரம் விட்டுணு புசிக்கிறவர்மகேசுரர் என்கிற சுருதியும் பஞ்சப் பிரம த்திற் பிரம்மாவுக்கும் சகலபூதத்துக்கும் சகலவித்தைக்கும் அதிபதி சதா சிவனென்கிற சுருதியும் விஸ்வரூபம் விட்டுணு விஸ்வத்துக்கு ஈசுரன் உரு த்திரனென்கிற சுருதியும் யக்கிய சிவரூபம் விட்டுணு. யக்கி வஸ்து ஈசுரன் உருத்திரனென்கிற சுருதியும் பிரகிருதிவிஷ்ணு பிரகிருதிக்குக்காரணம் மகே ஸ்வரனென்கிற சுருதியும் சதருத்ரீயத்தில் வேதபுருடன் வெகுவந்தனம் பண்ணிச்சமட்சமத்திற் பலப்பிராப்தி கேட்கிறதுடன் விஷ்ணுபிர்மா இந்தி ரன் அக்கினி முதலானபேர்பட்டமும் கேட்கிற சுருதியும் நாராயண உபநி டதம் நாராயணரைத் துதித்து முடிந்தவுடனே சத்தியம் சத்தியம் உக்கிர ட்டம் பிரம்மம் சாம்பசிவனே யென்று வந்தனம்பண்ணி முடித்தசுருதியும் வேதபுருடன் சிவனே வெகுவந்தனம்பண்ணி அரிபிரமாதி தேவதைகளுக்கு ஒவ்வொருவந்தனம் பண்ணியுமிருக்கிலன். அன்னிய தேவதை தோத்திரமெ ல்லாம் உருத்திர உன்பொருட்டென்று சொல்லிப் போந்த சுருதியும் சிவ னொருவனே பதி. என்பதற்குச் சான்று. மற்றுள்ளவெல்லாம் பசுக்கள். சிவன் உபாசியர் அரிபிரமாதி தேவதைகள் உபாசிகரென்கிற சுருதிபுராண ங்களும் சிவனே அரிபிரமாதி தேவதைகட்கு நிக்கிரகவனுக்கிரகன் சதாசிவ னுக்கு நிக்கிரக கர்த்தாவில்லையென்கிற சுருதி புராணங்களும் அரியும் பிர மாவும் சிவனுடைய அடியும் முடியும் தேடிக் காணமற்போனார்களென்கிற சுருதி புராணங்களும் முமுட்சுகள் சகலத்தையும்விட்டுத் தியானிக்கவேண் டிய வஸ்து சிவமொன்றேயென்று அதர்வணசிகா உபநிடதம் வாய்மூடிப் போன சுருதியும் பூர்வபக்ஷம் பண்ணிற்று. அஞ்சாம் வேதமாயிருக்கிற பாரதம் சாந்திபர்வம் மோக்ஷதன்மம் நாராயணியத்திற் கிருட்டிணதே வர் அருச்சுனனைப்பார்த்துத் திருவுளம் பற்றுகிறவாக்கியம் நாம் சர்வலோ கத்துக்கும் பரமாத்மா பாண்டு நந்தன நமக்குப் பரமாத்மா உருத்திரர் அவரை நாம் உபாசிக்கிறோமென்றார். கூர்ம புராணத்தில் அரியும் பிரம்மாவும் அகந்தையால் நீ கர்த்தா நான் கர்த்தா வென்கிற சங்கவா தத்தும் வேதம் நாலும் பிரணவமும் ரூபீகரித்து நீங்கள் கர்த்தாவ ல்லர் சாம்பசிவனே சர்வகர்த்தா வென்று சொல்லிப்போயிற்று. வியா சர் காசியிற் கையெடுக்கையில் தம்பித்துப்போனபின்பு நாராயணரைத் தியானிக்கையில் நாராயணர் வந்து யக்கியகர்த்தா இந்திரன். சிருட்டி கர்த்தா பிரம்மதேவர் நாம் செகத்துக்குக்கர்த்தா. சம்கர்த்தா மகேஸ் வரனென்கிற வாக்கியம் புராணங்களிலும் பிரசித்தமானபடியினாலும் சாம் பசிவனுடைய கையிற் பிரமகபாலமும் பாதத்தில் விஷ்ணுநேத்ரமும இரு க்கிறதென்று சகல புராணங்களும் எடுத்துச்சொன்னபடியாலும் அரிபிர

மாதி தேவதைகளைப் பிரமமென்கிற சுருதிகளெல்லாம் பூர்வபக்ஷமென்றும் சாம்பசிவனே சித்தாந்தவஸ்துவென்று சகலசாஸ்திர நிர்ணயம். சாம்பசிவனுக்கு நிட்கள சகளமிரண்டு கிருதகாடின்னியம்போல அபேத சைவ சாத்திரத்தில் நிட்களபேதமும் சகளபேதமும் விரித்துச்சொல்லும் வைதிகருக்குச் சாம்பசிவனுக்கே யல்லால் அரிபிரமாதி தேவதைகளுக்கு இல்லை. நிட்களத்தைச் சுருதி பிரமாணத்தாலும் நாமநிர்வசனத்தாலும் சொல்லுகின்றோம்.

சிவமொன்றே நாலாவதென்றறிகிறேனென்கிற உபநிடதப் பிரமாணத்தினாலும் ஆகாசத்தைப் பாய்போல் சுருட்ட வல்லவனாலும் சிவனை யறியாமல் மோக்ஷமடைகிற ஆன்மாக்களில்லை யென்கிற உபநிடதப் பிரமாணத்தினாலும் எல்லாவற்றிற்கு மிலக்ஷணம் எல்லாவற்றிகுஞ் சாக்ஷிஞானமயம் சதாசிவமென்று சோகம் பாவனை பாவித்த உபநிடதப்பிரமாணத்தினாலும் சம்புசிதாகாய மத்தியிலிருப்பாரென்கிற உபநிடதப் பிரமாணத்தினாலும் முமுட்சுகள் சகலத்தையும் விட்டுத் தியானிக்கவேண்டியவஸ்து சிவமொன்றேயென்று முடித்துப்போன உபநிடதப் பிரமாணத்தினாலும் சிவம் நிட்களமே, இதுவல்லாமல் வேதாந்த சாஸ்திரங்களினாலும் சிவம் பரமாத்மாவென்றும் சிவம் சுத்தமென்றும் சிவம் சைதன்னியமென்றும் அத்தேகோவ விசிட்டச் சிவகேவலோக மென்றும் பிரத்தியகமாய்ச் சிவோகமென்றும் சொல்லுகையினாலும் சிவம் நிட்களம். ஆக இது சுருதிப்பிரமாணம் சிவநாமத்துக்கு நிர்வசனம் சிவசப்தம். வசகாந்தோவென்கிற தாதுகாந்தி சோதிர்மயம் புட்பகெந்த மகிமணத்தில் இராஜத குணத்தினால் விசுவத்தை உற்பவம் பண்ணுகிறபடியினாலும் அகருப்பவயென்கிறநாமதேயம் சாதிகுணத்தினாலே சனங்களுக்குச் சுகத்தைக் கொடுக்கையினால் சங்காரம் பண்ணுகையில் அரா என்கிற நாமதேயம் நிர்க்குணமாய்ச் சோதிர்மயமாயிருக்கையினாற் சிவமொன்றே நாமதேயம். இந்தப்படி சொல்லியிருக்கையாலும் மற்றும் வேதாந்த சாஸ்திரங்களிலும் சிவம் சோதிர்மயமென்றிருந்ததினாலும் சிவம் நிட்களமென்று சகலசாஸ்திர நிர்ணயம்.

இந்தச் சிவத்துக்கு அபின்னசத்தி சிவை. சிவம் ஞானமயமாகையால் சித்து சித்துடைய அபின்னசத்தி சிற்சத்தி. சிவம் சர்வத்துக்கும் மேலான பொருளாகையால் பரம். அந்தப்பரத்தினுடைய அபின்னசத்திபரை. அந்தப் பரனும் பரையும் அனாதியாய் சுயம்புவாய் நித்யமாய் கிருதகாடின்னியம்போல சிற்கனமாய் திருவுருகொண்ட வஸ்து சாம்பசிவம். இதற்குப் பிரமாணம் இரண்டாம்வேதம் கைவல்லிய உபநிடதமும் தைத்திரிய உபநி

டதத்திற் சொரூபத்தியான மந்திரமும் பிரமாணம். அந்தரூபம் பிரகிருதி தனுவல்ல இதற்குப்பிரமாணம் இரண்டாம் வேதம் மந்திர புட்பமந்திரத்திற் பிரகிருதிக்குப் பராயென்றும் ஆதியில் விசுவத்துக்குப் பராயென்றும் சொல்லுகையினாலும் உபநிடதங்கள் சாம்பசிவனுடைய சொரூபமின்னபடியென்று நிர்வசனிக்கப்படாதென்றும் இன்னபடி யென்றறியக்கூடாதபடியினாலும் சிவனுடையதனு அப்பிராகிருதத்தனுவென்று சகல சாஸ்திர நிர்ணயம்.

சிவ சத்தத்துடன் சதாசத்தமும் மகாசத்தமுங் கூட்டிச் சுருதிசொல்லுகிறதினாலே நித்தியபரம மங்கள விக்கிரகமென்றும் சகல சாஸ்திர நிர்ணயம்.

நிட்களமாயிருக்கிறவஸ்து சகளீகரிப்பானேனென்னிற் சகல லோகத்தையும் முற்பவம் திதிலயம் பண்ணவேண்டியும் ஆத்மாக்களுக்கு முன்னால் முறைமை யுணர்த்தவேண்டியும் நான்முறை நடந்த ஆத்மாக்களுக்கும் அந்நான்முறை தப்பிய ஆத்மாக்களுக்கு மிருவினைப்பயனைப்புசிப்பிக்க வேண்டியும் ஆத்மாக்கள் தியானித்து உபாசிக்கும் பொருட்டும் இருவினையொப்பு மலபரிபாகம் வந்த ஆன்மாக்களுக்கு உண்மைக்கியானம் உபதேசிக்கும் பொருட்டும் திருவுருக்கொண்டாரென்றும் சகலசாஸ்திர நிர்ணயம.

இவருடைய் குணநாம கிருபையினால் இவரே சர்வகருத்தாவென்கிறதைச் சொல்லுகிறோம். குணநாம கிரிகளைச் சொல்லுவதற்கு ஆயிரநாவுடைய ஆதிசேடன் அநேக கோடிகற்பம் இடைவிடாமற் சொன்னாலும் தொலையாது. அறிந்தமாத்திரம் பதினைந்துலக்ஷணமாக அடக்கிச்சொல்லுகிறோம். இதுகொண்டு சாம்பசிவனே சர்வகர்த்தாவென்றறிக.

பதினைந்து லக்ஷண மாவது முந்தியது நித்தியனென்கிறது. இரண்டாவது சர்வகாரணனென்கிறது. மூன்றாவது சர்வக்கியனென்பது. நான்காவது சர்வநியந்தாவென்பது. ஐந்தாவது சாட்குண்ணிய பரிபூரணமுள்ள பகவானென்கிறது. ஆறாவது பரமபுருடனென்கிறது. ஏழாவது தேவனென்கிறது. எட்டாவது சர்வாந்திரியாமி என்கிறது. ஒன்பதாவது சர்வருமுபாசகர்கள் சிவன் உபாசியனென்கிறது. பத்தாவது சர்வலோக நமஸ்கிருதரென்கிறது. பதினொன்றாவது சூரியமண்டலத்திலுபாசிகரென்கிறது. பன்னிரண்டாவது எய்க்கியத்திலுபாசிகரென்கிறது. பதின்மூன்றாவது சர்வருந்தியானிக்கிறபேர் சிவனொருவனே தியேயரென்கிறது. பதி

னான்காவது சர்வகாமமும் கொடுக்கிறதில் அலுத்தசத்தியுடையவரென்கிறது. பதினைந்தாவது முத்திகர்த்தா வென்கிறது ஆக பதினைந்து வகையும் சங்கிரகமாகச் சொன்னோம் இந்த நாமங்களை விரித்துச் சொல்லுகிறோம்.

சிவஞானமூர்த்தி திருவடிகளே சரணம்.

முதலாவது நித்தியரென்கிற லக்ஷணம் சர்வசங்கார கர்த்தாவே நித்தியர் அவண நித்தியனானால் சர்வ சங்காரங்கூடாது சங்காரத்துக்கு மேல் கிரியையும் உருத்திரனுக்குமேல் தெய்வமுஞ் சுருதிசொல்லாதபடியினாலே சங்காரகர்த்தாவை லயப்படுத்த தெய்வ மெங்கேயிருந்துவரும் சர்வசங்காரமாவது சகலவிசுவத்தையும் அரிபிரமாதி தேவர்களையும் தம்முடைய விடத்தில் லயப்படுத்திக்கொள்கிறது. இதற்குப்பிரமாணம், பிராமணன் போசனசமயத்தில் செபிக்கிறமந்திரம் பெருவிரல் மாத்திரம் புருடன் அவர் சகல சகத்திற்கு ஈசனுசமில்லாத பொருள் விசுவத்தை பொசிப்பவரென்கிற மந்திரமும் அன்னம் பிரம்மதேவர் சாரம் விஷ்ணுபொசிக்கிறவர் மகேஸ்வரனென்கிற மந்திரமும் பிரமாணம். இது வல்லாமல் சகல புராணங்களும் பிரமசின்னம் விஷ்ணுசின்னமெல்லாம் எப்போதுந் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே அவரே நித்தியரென்கிற வசனத்தினாலும் சாம்பசிவனே நித்யரென்று சகலசாஸ்திர நிர்ணயம்.

சைவநூல் சங்காரத்துக்குமேல் திரோபவ அனுக்கிரகத்துக்குக் கர்த்தா மகேஸ்வரமென்றும் சதாசிவமென்றும் சொல்லுகிறதே தென்னில் திரோபவமாவது சுபாவத்தை மறைத்து மாயாபதார்த்தத்தை ருசிபோலத் தோற்றப் பண்ணுகிறது. அனுக்கிரகம் பண்ணுகிறதாவது உண்மை ஞானத்தை உபதேசித்து முத்தி கொடுக்கிறது இந்த இரண்டு கிர்த்தியமும் சங்காரத்துக்கு முன்னல்லாமல் சங்காரத்துக்குப் பின்னல்லவே ஆகையால் திரோபவமும் அனுக்கிரகமும் சங்கார கர்த்தாவினுடைய கிரியையே மகேஸ்வர சதாசிவமென்கிறது. சங்கார கர்த்தாவுடைய பேதந் தானென்றும் அவருடைய நாமதேயந்தானென்றும் சகல சாஸ்திர நிர்ணயம.

இல்லாதிருந்தால சங்காரத்துக்குமேல் கிரியையும் இல்லை. சங்கார கர்த்தாவுக்குமேல் கர்த்தாவுமில்லை. என்கிற சுருதிக்கு விரோதம் திருவுருக்கொண்டிருக்கிற மூர்த்தியை நித்தியமென்று எல்லாரும் சொல்லவில்லையே என்னில், அவர்களுக்குச் சுருதிநிர்ணயம் தெரியாது. அது எப்படியென்னில் ஆத்மாக்கள் அளவில்லையாதலால் பிரபஞ்சம் எப்போது மனித்

தியம். நித்தியமானால் கர்த்தா வொருவனும் நித்தியமல்லவோ. சர்வ சங்காரத்தில் லயமாகின்றதே என்னிற் புனருற்பவ முண்டாகிறபடியினாலே பிரபஞ்ச நித்தியமேசரி. லயத்துக்கும் புனருற்பவத்துக்கும் கர்த்தா நித்தியனல்லாதிருந்தால் சர்வசங்காரத்திலே வேத முதலிய நூல்களெல்லாம் இறந்துபோமே. புனருற்பவமான ஆத்மாக்களுக் குபதேசிக்கிறவர் யார். கர்த்தா நித்தியனாயிருந்தே யுபதேசிக்கவேண்டுமென்று சுருதி நிர்ணயமானபடியினாலே சர்வ சங்காரத்தைக் குறித்து அரனென்றும் நித்தியராகையாற் றாணுவென்றும் நாமதேயம். அரிபிரமாதி தேவதைகளுக்கு நித்தியத்துவஞ் சுருதிபுராணஞ் சொல்லுகிறதே யென்னிற் றயிந்தன பிரளயத்தைக் குறித்துப் பிர்மாவுக்கு நித்தியத்துவமும் பிரமப் பிரளயத்தைக் குறித்து விட்டுணுவுக்கு நித்தியத்துவமு மல்லாற் சர்வ சங்காரத்துக்கு நித்தியர்களல்ல வென்பது சகல சாஸ்திர நிர்ணயம்.

நித்தியரென்கிற இலக்ஷணமுற்றும் எதில் யாதில் உற்பத்தியென்ற சாத்திரத்தினாற் சங்கார கர்த்தாவினிடத்திலிருந்து சகமும் உண்டாகவேணும் இதற்குப் பிரமாணத்தை விசாரித்துச் சொல்லுகிறோம். பவ என்கிற நாமத்துக்கு நிர்வசனம் எல்லாவற்றையும் உற்பவம் பண்ணிவைக்கிறவனென்றறிக. அம்மை யென்கிற நாமத்துக்கு நிர்வசனம் லோகமாதா வென்றறிக. ஆகையாலும் வேதத்தில் இரண்டாம்வேதம் விசுவத்தைக்கடந்திருக்கிற உருத்திரர் பிரமதேவரை யுண்டாக்கிப் பார்த்து நல்ல புத்தியுங் கொடுத்தாரென்றும் முதல்வேதம் உமையுடனே கூடியிருக்கிறவரிடத்தில் விட்டுணுவந்தமாயேழுதேவதைகளுடன் உண்டானார்களென்றும் அதர்வண சிகா வுபநிடதம் பிரமா விட்டுணு உருத்திரர் தேவேந்திரன் இவர்கள் இவனிடத்திலிருந்து உண்டானார்களென்றும் சொல்லுகிறதினாலும் மற்றுமுள்ளசுருதி பிரமாணங்களினாலும் இவனிட்த்திலிருந்து சகல தேவதைகளு முற்பவம் விசுவத்தைச்சிருட்டித்து அதிலே பிரவேசித்தாரென்கிற சுருதி பிரமாணத்தினாலும் சகல செகத்தும் சிவனிடத்திலே உண்டாகிறது அவ்ரிடத்திலேயிருக்கிறது அவரிடத்திலே லயப்படுகிறது, என்ற சுருதிப் பிரமாணத்தினாலும் மற்றுள்ள சுருதிப்பிரமாணத்தினாலும் சகல விசுவமும் அவரிடத்திலே உற்பவமாகையால் சுருதிப்பிரமாணத்தினாலேயும் நாம நிர்வசனத்தினாலேயும் சகலமும் சங்கார கர்த்தாவினிடத்தில் உற்பத்தியென்றறிக. சங்காரகர்த்தா ருத்திரனாயிற்றே ருத்திரனுக்குக்கூட வுற்பத்தி சிவனிடத்திலிருந்தென்ற அதர்வண உபநிடதத்துக்குப் போக்கேதென்னில் அந்த உருத்திரர் காலாக்கினி உருத்திரரென்றறிக. அதற்குப்

பிரமாணம் புராணவசனத்திற் கண்டுகொள்க. கூர்மபுராணத்திற் சாம்பசிவனுடைய தக்ஷிணாங்கத்திற் பிரமதேவ ருண்டானார். வாமாங்கத்தில் அரியுண்டானார். இலாடத்திற் காலாக்கினி ருத்ரர் உண்டானாரென்று சொன்னதினாலும் பாத்மபுராணம் உத்திரகாண்டத்திலு மிந்தப்படி சொன்னதினாலும் காந்த புராணம் லிங்கபுராணம் சைவபுராணம் முதலான புராணங்களிலு மிந்தப்படி சொல்லுகிறதினாலும் பாரதம் அனுசாசனிகபர்வத்திலும் அன்னிய உபாக்கியானத்திலும் இந்தப்படிச் சொல்லுகிறதினாலும் காலாக்கினி ருத்ரனென்றே சகலசாஸ்திர நிர்ணயம்.

சங்காரகர்த்தாவுக்கு மகா ருத்ரனென்றே நாமதேயம். நாராயணரிடத்திற் சகல செகமுமுண்டாகிறது. பிரமதேவரிடத்திலும் சகல சகமுமுண்டாகிறது. நாராயணரிடத்திற் பிரமதேவருண்டானார். நாராயணரிடத்திலும், பிரமதேவரிடத்திலும் உருத்திரருண்டானா ரென்றும் சொல்லுகிற சுருதி இதிகாச புராணங்களுக்குப் போக்கேதென்னில் இவைகளெல்லாம் ஒரு அவசரத்தைக்குறித்து என்று சாஸ்திரங்கள் நிர்ணயம் சொல்லுகிறோம்.

பிரமாவுக்கு நூறுவயது சென்றபிறகு பிரமலோகத்தை யடைந்த சந்நியாசிகளுங்கூட மகேஸ்வரபதத்தை யடைந்தவரென்று இரண்டாம் வேதமந்திரபுட்பம் சொல்லுகிறதினால் காலத்துக்கு நாராயணர் நித்தியமல்லவா அவரிடத்தில் செகத்து அடங்கிப் புனருற்பவமாமென்றும் பிரமாவினுடைய தைந்தினப் பிரளயத்தில் கீழ்ப்பட்டலோகமெல்லாம் நாசமாய் திரும்பி பிரமதேவராலுண்டாகையால் பிரமதேவரிடத்தில் செகத்து உண்டாயிற்றென்று புராண இதிகாசங்கள் சொல்லுகிறதைக கண்டுகொள்க.

நாராயணரிடத்திற் பிரமதேவருண்டானாரென்பது பிரமதேவர் முத்தியடைந்த காலத்திற் றிரும்பி செகசிருட்டிக்கு பிரமபட்டத்திற்கு வருவாரென்று காந்த முதலான புராணங்கள் சொல்லுகிறதினாலும் தை[?]தினப் பிரளயத்தில் நாராயணனுடைய உந்திக்கமலத்திலடங்கி நித்திரைபண்ணி திரும்பவும் சிருட்டிப்பாரென்று புராண இதிகாசங்கள் சொல்லுகிறதினாலும் நாராயணரிடத்திற் பிரமதேவருண்டானாரென்று சொன்ன அவசரம் நாராயணரிடத்திலும் பிரமதேவரிடத்திலும் உருத்திரருண்டானாரென்று சொன்னது அவர்களிடத்துற்பவித்து அவர்களுக்கு ரக்ஷைத்தொழிலும் சிருட்டித்தொழிலும் அனுக்கிரகம் பண்ணின அவசரமென்று புராண இதிகாசங்கள் சொல்லுகிறதைக் கண்டுகொள்க. ஆகையால் சங்காரகர்த்தாவி

ணிடத்திலிருந்தே சகலமு முற்பத்தியென்று சகல சாஸ்திர நிர்ணயம். ஆகையால் சங்காரகர்த்தாவே சகல காரணரென்றறிக. சர்வகாரணரென்கிறது முற்றும்.

இயற்கையுணர்வு முற்றுமுணர்தலுமுள்ள கர்த்தரவே சர்வவிக்கினரென்று சகல சாஸ்திர நிர்ணயம். ஆகையால் சாம்பசிவனுக்கே இயற்கையுணர்வு. இதற்குப் பிரமாணம் இரண்டாம் வேதம் மந்திரபுட்பத்தில் விசுவத்திற்கு ஈசுரனாயிருக்கிற ருத்ரர் பிரமாவை சிருட்டித்துப் பார்த்து நல்லபுத்தி கொடுத்தாரென்றிருக்கிறதற்கு புராணம் சாம்பசிவன் பிரமதேவரை சிருட்டித்து சகலவேதமும் அத்தியயனம் பண்ணிவைத்தாரென்றிருக்கையினாலும் விட்டுணு கபில அவதாரமாக சாம்பசிவனிடத்தில் சாங்கியக்கியானம் உபதேசித்துக் கொண்டாரென்கிற உபநிடத வசனத்தினாலும் கூர்மபுராணத்து உத்தரகாண்டத்தில் வெதிரியாச்சிரமத்தில் நாராயணருக்கு மகேஸ்வரன் பிரஸன்னமாய் ஈசுரகீதை பதினொரு அத்தியாயம் உபதேசித்த வசனத்தினாலும் பாத்மபுராணம் உத்தரகாண்டத்திலே அகத்தியரிடத்தில் வியாஸர் தீக்ஷைபண்ணிக்கொண்டு ருமபத்திரசுவாமி சாம்பசிவனை உபாசித்தபின்பு சிவன் பிரஸன்னமாய் சிவகீதை உபதேசம் பண்ணினபடியாலும் காந்தம் சூதசமிதைஞான வைபவ காண்டமுதல் சரஸ்வதிக்கு உபதேசித்தபின்பு நாராயணருக்கு உபதேசித்தபடியினாலும் முத்திகாண்டம் வியாழபகவானுக்கு உபதேசித்தபடியினாலும் பிரமகீதை பிரமாவுக்கு உபதேசித்தபடியினாலும் பிரமாவினுடையபிள்ளைகள் விட்டுணு வங்கிசமாயிருக்கிற சனகாதி நால்வருக்கும் சிவஞானம் உபதேசித்தபடியினாலும் அட்டாதச வித்தையும் சிவம் நந்திதேவருக்கு உபதேசித்து நந்திகேசுரர் சனற்குமாரருக்கு உபதேசித்து சனற்குமாரர் வியாசருக்கு உபதேசித்து வியாசர் சுமந்துன பயிலர் சைமினிவைசம்பாயனர் சூதர் ஆக இவர்களுக்கு உபதேசித்தாரென்று சகலசாஸ்திர புராணங்களும் சொல்லுகிறபடியினாலும் வியாசருடைய பிள்ளை சுகருக்கு சங்கியக்கியான முபதேசித்தாரென்று சொல்லுகிற புராண வசனத்தினாலும் இன்னும் பிரமாணமனேகமாகையாற் சாம்பசிவனுக்கே இயற்கையுணர்வும் மற்றையோருக்கெல்லாம் செயற்கை யுணர்வும் முற்று முணர்தலு மவருக்கே. இதற்குப் பிரமாணம் இரண்டாம் வேதம் சகல பூதருக்கு மீசுரன் சகலவித்தைக்கு மீசுரன் என்று சொன்னதிற்கு புராணவசனம் வேதம்நாலும் அங்கமாறும் மீமாஞ்சை ஞாயசாஸ்திரம் தன்மசாஸ்திரம் புராணம் ஆயுள்வேதம் தனுவேதம் காந்திருவவேதம் அர்த்தசாஸ்திரம் ஆக அட்டாதச வித்தைக

ளுக்கும் சூலபாணியேகர்த்தாவென்று சுருதிக்கு உரையிட்ட புராணவசனங்களினாலும் சத்த சாத்திரம் மந்திர சாத்திரம் மற்றுமுள்ள வைதிக லௌகீக சாஸ்திர மெதுஉண்டோ அதுவெல்லாம் சாம்பசிவனையே திருவுளம் பற்றினது என்கிற பிரமாணத்தினாலும் சிவனே முற்றுமுணர்ந்தவர் மற்றபேர்களெல்லாம் முற்றுமுணர்ந்தவர்களல்ல ஆகையா லியற்கையுணர்வுமுற்று முணர்தலுமுள்ள சாம்பசிவனே சர்வவிக்கினர். இதுவல்லாமல் சர்வசங்கார காலத்தில் சகல நூல்களும் நித்தியனாக விருக்கிற கர்த்தாவினிடத்திலே யல்லவோ இருக்கிறது. அனித்தியரிடத்திலிராதே புனருற்பவகாலத்திற் சகலருமாரிடத்திலே யிருந்து கேட்கவேணும். நித்தியனாக விருக்கிற கர்த்தாவினிடத்திலிருந்தே சகல நூல்களும் கேட்கவேணுமாகையாற் சகலநூல்களும் சொன்னவன் சர்விக்கினனென்று சகல சாஸ்திர நிர்ணயமாகையால் அமரசிங்கத்திலும் சம்புவாதி நாமத்துடனே சர்விக்கினரென்று நாமதேயம் மூன்றுவது முற்றும் சர்வனியந்தாவென்கிற நாமாமிலக்ஷணம் எல்லாருமொருவனுடைய ஆணையை வகிக்க அவன் ஒருவருடைய ஆணையை வகியாமலிருக்க எல்லாரும் ஒருவனிடத்தில் நிக்கிரகவனுக்கிரகம்பெற அவன் ஒருவரிடத்திலும் நிக்கிரகவனுக்கிரகம் பெறுமலிருக்கச் சர்விக்னத்துவமு மிருக்க அவனே சர்வனியந்தாவென்று சகலசாஸ்திர நிர்ணயம். அது யாரென்றால் சாம்பசிவனே இதற்குப் பிரமாணம்.

(இன்னும் வரும்)

வி. குஞ்சிதபாதம் பிள்ளை,

ஸ்ரீ சிவஞானத்திருத்தளி,

ஸ்ரீ சிதம்பரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானம்.

சிவஞானம் என்பது ஆன்மாக்களுக்குச் சிவத்தைக்காட்டும் கருவியாம். இந்தக் கருவி திருவருளேயாதலின், அந்தத்திருவருளை சிவஞானம் எனப்படும். காட்சிகள் அனைத்தும் திருவருள் வாயிலாகவே நிகழுமாயினும், பெத்தநிலைக்கப்படும் காட்சிகளுள் யாதொன்றுவது திருவருள்வாயிலாக நேரே நிகழ்வதில்லை. அந்த நிலையில், திருவருள், மாயாகருவிகளினும் ஆன்மபோதத்தினும் மறைந்து நின்று தொழிற்படும். முத்திநிலையின் மாத்திரமே அது நேருறநின்று தொழிற்படுவது.

மாயாகருவிகளாகிய பொறிபுலன்களாற் காணும் காட்சியில் ஆன்மபோதமும், அதனுள் திருவருளும், மறைந்து நிற்கும். ஆன்மபோதத்தாற் காணும் காட்சியில், திருவருள் மாத்திரம் மறைந்து நிற்கும். புலக்காட்சி போதக்காட்சிகளினும் திருவருள் நிகழுமாயினும், அந்நிகழ்ச்சி பெத்தநிலைக்குரியதாதலின், அது ஆன்மாக்களுடைய பக்குவத்துக்கியைந்தவாறு திரோதான வடிவுற்று நிகழும், ஆனது பற்றியே அந்தக்காட்சிகளுள் ஒன்றுவது உண்மைக்காட்சி எனப்படுவதில்லை. கருவி கரணங்களைக்கழன்று, ஆன்மபோதத்தை இழந்து, திருவருள் மாத்திரையாற்காணும் காட்சியே முத்திக்காட்சியாகிய உண்மைக்காட்சி அல்லது ஞானக்காட்சி எனப்படும்.

இதுபற்றியே கருவிகரணங்கள் கொண்டு காணுங்காட்சி பாசஞானம் எனவும், ஆன்மபோதங்கொண்டு காணும்காட்சி பசுஞானம் எனவும் திருவருள்கொண்டு காணும் காட்சி பதிஞானம் எனவும் சொல்லப்படும். இந்தப்பதிஞானமே சிவஞானமாம். புறத்துள விடயங்களை எமது பொறிபுலன்கள் கிரகிக்குமிடத்து எழுங்காட்சியே பாசஞானம் எனப்படுவது. அங்ஙனம் எழுந்த காட்சியைத் துணைக்கொண்டு ஆன்மா தனது சிற்சத்தியால் ஊகித்தறியும் காட்சியே பசுஞானம் எனப்படுவது, இந்தக்காட்சிகளிற் றவிர்ந்து திருவருளை மாத்திரம் துணையாகக்கொண்டு காணும் காட்சியே

பதிஞானம் எனப்படுவது. இந்த முத்திறக்காட்சிகளையும், பிரத்தியட்சக் காட்சி, அனுமானக்காட்சி, அனுபவக்காட்சி என்று ஒருவாறு எடுத்துச் சொல்லலாம். இவற்றை அறிவு, உணர்வு, உண்மை, அனுபவம் என்று சொல்வதும் பொருந்தும்.

இந்த முத்திறக்காட்சிகளுள் புலக்காட்சியாகிய பாசஞானத்தைப் பௌதிகதத்துவ சாத்திரம் (Material Science) கொண்டும், அனுமானக்காட்சியாகிய பசுஞானத்தை சீவதத்துவசாத்திரம் (Phychology) கொண்டும் நாம் ஒருவாறு அளந்தறிவதுகூடும். பதிஞானமாகிய சிவஞானம் எமது சுட்டறிவுகொண்டு கிரகித்தற்குரியதல்ல. அதுபற்றியே அதனைப் பரமகுரவராகிய தக்ஷிணாமூர்த்தியும் "இருந்து காட்டிச் சொல்லாமற் சொன்னார்" அக்காட்சி "நினைப்பு மறப்பற்ற" காட்சி என்றும் "சகலகேவலமற்ற" காட்சி என்றும் "அறிவறியாமையற்ற காட்சி" என்றும் சாத்திரங்களால் எடுத்துக்காட்டப்படுவதும் இதனை வலியுறுத்தும். பெத்ததசையிலே எமது நிலை நினைப்பில் அமைந்து விளங்கும்" அல்லது "மறப்பில்" அமைந்து விளங்கும் இந்த இரண்டுமல்லாததொருநிலை பெத்ததசைக்கணில்லை. இங்ஙனமே சசல கேவலங்களுமாம். நாம் கேவலத்தாவது சகலத்தாவது அமைந்தே பெத்ததசைக்கண் விளங்குவோம். இந்த இரண்டிலொன்றன்றிப் பிறிதொருநிலை பெத்த தசைக்கணில்லை. எமது "அறிவறியாமைகளும் இங்ஙனமேயாம். இந்தப் பெத்த நிலையிலே நாம் அறிவுடையேமாய் அல்லது அறியாமை உடையேமாய் விளங்குவதன்றிப் பிறிதொருநிலை எமக்கில்லை. (இங்கே அறிவு என்றது எமது கருவி கரணங்கள் தொழிற்படுதலால் பெறப்படும் சைதன்னிய விளக்கம்.) முத்திதசையின்கண் எமது சேதனசத்தி யாதொரு மாயாகருவியின் உதவியின்றித் திருவருளால் விளங்கும். இந்த விளக்கமே சிவஞானம் எனப்படும். மாயாகருவிகளாலும் அவற்றைத் துணைக்கொண்ட ஆன்மபோதத்தாலும் விளங்கும் எமதறிவு சுட்டறிவெனப்படும். இந்தச்சுட்டறிவு கொண்டு வியாபகனாகிய இறைவனை நாம் காண்பதுகூடாது. அவனை அவனருளாகிய சிவஞானங்கொண்டே நாம் காணுதல் வேண்டும் அவனை நாம் காணுமிடத்து எமது அறிவுதானும் தொழிற்படுவதில்லை என்று சாத்திரங்கள் சாதித்தல்பற்றி, அந்த நிலையிலே நாம் அறிவின்றி மூடநிலையில் அமைந்து கிடப்போம் என்பது சிறிதும் போந்திடாது. சாத்திரங்களிலே அறிவென்று எடுத்துப் பேசப்படுவதெல்லாம் சுட்டறிவாம். வியாபக அறிவு இச்சுட்டறிவுக்கு மேலா உள்ளது. இதுவே சிவஞானம்

என்ப்படுவது. இது பொறிபுலன் முதலிய புறக்கருவிகளும் மனம் புத்தி முதலிய அகக் கருவிகளுமின்றி திருவருளால் எமது சேதன சத்தி விளங்கும் விளக்கமாம்.

இங்ஙனமானதொரு விளக்கம் எமக்கு இப்போது சிறிதாவது நிகழாமையால், இதனை நாம் நம்புவதெங்ஙனம் என்று சிலர் வினவுதல் கூடும். பெத்த நிலையிலே முத்திநிலைக்குரிய நிகழ்ச்சி நிகழ்வது கூடாதென்பது சத்தியம் அது கொண்டு அங்ஙனம் ஒரு நிலை இல்லை என்பது போந்திடாது. மறுமை எனப்படுவது ஒன்று உண்டென்பது இம்மையிலே யாவராவது அனுபவத்திற் கண்டதல்ல. அங்ஙனம் காணாமைபற்றி மறுமையுண்டென்பதை மறுப்பது கூடாது. அரிச்சுவடி கற்பானொருமாணாக்கன் பீசகணித நுட்பத்தைத் தனது அனுபவஞானங்கொண்டு அறிவது கூடாமைபற்றி, அந்தச்சாத்திர நுட்பத்தை இல் பொருள் என்று சாதிப்பது மடமை எனப்படும். கடவுளை நாம் எமது சுட்டறிவுகொண்டு அறியாமைபற்றி, இல்லை என்று சாதிப்பது பெரும் பித்தெனப்படும். இங்ஙனமே அந்தக்கடவுளைக் காண்டற்குரிய சிவஞானத்தையும் நாம் இந்த நிலையில் எமது அனுபவத்திற்கண்டு கொள்ளாமைபற்றி அதனை விசுவசித்தல் கூடாதென்று கொள்வதும் பேதமையின்பாற்பட்டிடும்.

கடவுள் ஒருவர் உளர் என்பதை நாம் விசுவசிப்பதுண்டானால், அந்தக்கடவுள் அகண்டிதாகாரவஸ்து என்றும். அந்த வஸ்து எமது சுட்டறிவுக்கெட்டாததென்றும் நாம் விசுவசித்தல் வேண்டும். கடவுள் சுட்டறிவுக்கு எட்டுவதுண்டானால், அவரும் சுட்டறிவுக்கெட்டும் ஏனைய பொருள்கள் போல அசத்துப்பொருளாய் விடுவர். எனவே அவர் பிரபஞ்சகாரணராகமாட்டார். அகண்டிதாகார வஸ்துவாகிய கடவுள் ஒருவர் உண்டானால், அந்த வஸ்துவால் நாம் அடையத்தக்க பெரும்பேறு ஒன்று உண்டென்பதும், அந்தப்பேறு அவருடைய திவ்விய சொருபத்தைத் தரிசித்து நிரதிசயானந்தம் அடைதலே என்பதும், எனவே அங்ஙனம் அடைதற்கேதுவாகிய சிவஞானம் என்பதொன்றுண்டென்பதும் தெற்றெனப் போந்திடும். கடவுளை நாம் அறிவது ஒருகாலத்தும் கூடாதெனின், அவர் அப்பிரயோசனப்பொருளாய் ஆகவே அவர் ஒருகுறை வுடையராய் ஆகவே அவர் வரைவின்பாற்பட்டோராய், ஆகவே அவர் துக்க மோகங்களுடையவராய் கடவுள் இலக்கணத்திற் பிறழ்ந்திடுவர். ஆகவே கடவுள் ஒருவர் உள்ள பொழுதே அவரை அறியும் உபாயமும் ஒன்றுளதென்பது நன்கு பெறப்படும்.

புலக்காட்சிக்கெட்டாத பலதுறைகள் எமது அநுமானக்காட்சிக்கு விடயமாதல் போல, அந்த அநுமானக்காட்சிக்கும் எட்டாத கடவுள் எமது அநுபவக்காட்சிக்கு எட்டுதல் கூடும். இதுபற்றியே சாத்திரங்கள் அந்தக்கடவுளை அவனருளாகிய சிவஞானங்கொண்டு காணுதல் வேண்டும் என்று சாதிக்கும். புலக்காட்சியின்கண்ணே எமது ஆத்மபோதம் எங்ஙனம் மறைந்து நிற்குமோ அங்ஙனமே எமது ஆத்மபோதத்தினும் திருவருள் மறைந்து நிற்கும். எமது ஆத்மபோதம் வலியுற்றுத் தொழிற்படுமிடத்து புலக்காட்சி மறைந்திடுதல் போலத்திருவருள் வலியுற்றுத் தொழிற்படுமிடத்து ஆத்மபோதமும் புலக்காட்சியும் ஒருங்கே மறைந்திடும். இவைகள் மறையவே திருவருளின் தொழிற்பாடே அந்தநிலைக்கண் நிகழும். அது தனித்து நிகழுமிடத்து எமக்குக் கடவுளுடைய சொரூபம் தோன்றும். இந்த நிகழ்ச்சியே சிவஞானம் எனப்படுவது.

பெத்த நிலைக்குரிய கேவலத்தில் ஆன்மாக்கள் ஆணவ மலத்தாற் கட்டுண்டு தமது சைதன்னிய ஆற்றல் சிறிதாவது பிரகாசித்தலின்றி மூடமாய்க்கிடக்கும். அங்ஙனம் கிடக்கும் ஆன்மாக்கள்மீது கொண்ட காருண்ணியத்தால் இறைவன் அவ்வான்மாக்களுக்கு மாயாகருவிகளைக் கொடுத்து இயக்குவன். அங்ஙனம் இயக்குமிடத்து ஆன்மாக்களுடைய சேதனசத்தி ஒருசிறிது விளக்கமுற்றுப் பிரகாசிக்கும். இந்தப் பிரகாசமே சுட்டறிவு என்று சொல்லப்படுவது. இந்தச் சுட்டறிவுகொண்டு ஆன்மாக்கள் திருவருளைச் சிறிது சிறிதாக அநுபவிக்கவே, அவ்வான்மாக்களைப்பற்றிய மலத்தடையும் படிமுறையாகக் கழன்றிடும். அது கழலவே திருவருட்பிரபை ஆன்மாக்களிடத்துப் பூரணமாகப் பிரதிபலிக்கும். ஆன்மாக்கள் எல்லாம் சார்ந்ததன்வண்ணமாகும் இயல்புடையன வாதலால், மலத்தைப்பற்றியபோது அந்த மலத்தின் தன்மைபடைத்தும், அந்த மலங்கழன்று திருவருளைப்பற்றியபோது திருவருளின் தன்மைபடைத்தும், அந்த நிலையிலே கருவி கரணங்கள் வேண்டாது இறைவனைக்கண்டு, அக்காட்சி காரணமாக நிரதிசயானந்தம் அநுபவிக்கும். இந்தக்காட்சியே ஞானக்காட்சி எனப்படுவது. இக்காட்சி எமது பெத்தக்காட்சிபோல்வதன்றாதலால், அது எமது பெத்த அநுபவங்கொண்டு அறியப்படாது. அங்ஙனமாயினும் கடவுள் ஒருவர் உளராகவே அவரை அறியும் உபாயமும் ஒன்று உளதாதல் வேண்டும் என்னும் நியாயத்தாலும், அங்ஙனம் அறிந்த ஞானிகளது திருவாக்குகளானும் அந்த ஞானத்தினுண்மை நாம் எல்லாம் நன்கறியக்கிடக்கின்றதென்க.

இந்தப் பெத்தநிலையிற்றானும் கருவிகரணங்களின் சேட்டையின்றி எமது சைதன்னிய சொரூபம் பிரகாசித்தலை நாம் ஒருவாறு காணலாம் இந்தக் கருவி கரணங்கள் கொண்டு நாம் கண்ட யாதொருகாட்சியால் எமக்குண்டாய இன்பம் அக்காட்சி மறைந்து எமது கருவி கரணங்கள் பிறிதொரு காட்சியிற் றொழிற்படு [illegible] டத்தும் எம்பால் நிகழுவதை நாம் அனுபவத்தில் இனிது காணலா [illegible] ந்த நிலையிற்றானே இந்நிகழ்ச்சி கூடுமாயிற் முத்தி நிலையில் அந்நிகழ் [illegible] வளவாக எம்பால் நிகழத்தக்க தென்பது நாம் எல்லாம் அனுபவத் [illegible] வத்துக் கண்டுகொள்ளத்தக்க தென்க.

இங்ஙனம்,

ச. சபாரத்தின முதலியார்,

யாழ்ப்பாணம்.